விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1959 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 ஐப்பசி 10 முஹறம் 20 இதழ் 256
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-10-83

# "பேச்சுவார்த்தைகளில் பயனில்லை" 'சிவா' கருத்து

(சென்னை)
இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இன்றைய மனநிலையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா அவருடன் தொடர்பு கொண்டு பேசுவதில் எந்தவித பயனும் ஏற்படமாட்டாது என்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கருத்து வெளியிட்டுள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் திருச்சியில் நேற்று கருத்து வெளியிட்ட அவர் தமது கட்சி உறுப்பினர்கள் விரைவில் இலங்கைக்குச் சென்றதும் 'ஒத்துழையாமை' இயக்கமொன்றை ஆரம்பிப்பார்கள் என்று கூறினார்.

"இலங்கைஅரசு சில தமிழ்த் திரைப் படங்களை அண்மையில் தடைசெய்துள்ளது. இச்செயல் இலங்கைத் தமிழருக்கும், தமிழ் நாட்டுக்கும் இடையில் இருந்தவரும் பாரம்பரிய கலாசாரத் தொடர்பினை துண்டிக்கும் ஒரு நடவடிக்கையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர், திருச்சி வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள் வரவேற்புக்கூட்டத்தில் அவர் பேசுகையில், "இலங்கை அரசின் உதவியுடன் தமிழர் பிரதேசங்களில்

(8ம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர்களுக்கு

# 5ம், 6ம் கட்ட உணவுப்பொருள் திடீர் நிறுத்தம்!

## தலைமையகம் உத்தரவு!

[நமது அலுவலக நிருபர்]
பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த அரச, கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர்களுக்கு அக்டோபர் மாதத்திற்குரிய 5-ம், 6-ம் கட்ட உணவு பொருட்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளன.

இதுபற்றி யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரிடம் நேற்றுக் கேட்டபோது; மேலிடத்து உத்தரவுப்படியே இவர்களுக்கு 5ம், 6ம் கட்ட உணவுப்பொருட்கள் வழங்கப்படவில்லைஎன்றுதெரிவித்தார்.

"இவர்களுக்கு முதல் நான்கு கட்ட உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டதா?" என்று கேட்டபோது; முதல் நான்கு கட்ட உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டதாகவும், அரசாங்க கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியருக்கு 5-ம், 6-ம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்கவேண்டாம் என்றுமேலிடம் அறிவித்ததால், அது வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

"உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இதே நிலைமை தானா?" என்று நான் கேட்ட போது, "எல்லா இடமும் அப்படித்தான்" என்றார்.

"யாழ்ப்பாணத்தில் முதல் நான்கு கட்டத்திலும் எத்தனை பேருக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன?"

"14 வயதிற்கு மேற்பட்ட 5060 பேருக்கும், 14 வயதிற்கு உட்பட்ட 1493 பேருக்கும் முதல் நான்கு கட்ட உணவுப் பொருள் வழங்கப்பட்டது."

5-ம், 6-ம் கட்ட உணவு பொருட்கள் வேறுயாருக்கு வழங்கப்பட்டது?"

(8ம் பக்கம் பார்க்க)

## நவம்பர் மாதம் முதல் 2 மணிநேர மின்வெட்டு

(எஸ். குகநாதன்)
மின்சார விநியோக வெட்டு நாடு முழுவதும் அடுத்த மாதம் முதல் அமுல் செய்யப்படும் என்று இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

மின் வெட்டு குறித்து இ. மி. சபையின் உயர் அதிகாரி ஒருவர் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில், கால நிலை சீர்கேடு காரணமாகவே மின்வெட்டு அமுல் செய்யப்படுகிறது என்றும் நவம்பர் மாதம் முதல் தினமும் இரண்டு மணி நேரம் மின்சார விநியோகம் தடைப்படும் என்றும்கூறினார்.

## அமைச்சர் விமலா மட்டுநகர் விஜயம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புக்கு இன்று விஜயம் செய்யும் கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கர மட்டக்களப்பிலுள்ள அகதிகள் முகாம்களுக்கும் சென்று பார்வையிடுவார்.

இன்று மாலை கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் மகாநாட்டிலும் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

## யாழ்ப்பாணத்தில் புதிய சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)
மட்டக்களப்பு சிறைஉடைப்புத் தொடர்பான விபரங்கள் அடங்கிய சுவரொட்டிகள், யாழ். நகர் எங்கும், பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டிகளில் சிறைமீண்ட இளைஞர்கள் எனக் கூறப்படுவோரின் படங்களும் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு சிறைஉடைப்புச் சம்பவத்திற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப்படையான மக்கள் விடுதலைப் படையே பொறுப்பு என்றும் அச்சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ள இடத்தில் பி. எல் ஒ. என்ற ஆங்கில எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளது.

"ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் தப்பித்தோம்" என்ற தலைப்பில்; சென்ற வாரத்தில் 24 பேர் படகுகளில் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள் என்றும் சென்னையிலிருந்து 00 மைல் தொலைவில் ஒரு மறைவிடத்தில் சில பத்திரிகையாளர்களை நள்ளிரவில் சந்தித்துப் பேசினார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது

அந்த சுவரொட்டியில், 'டக்ளஸ்' என்ற தேவானந்தன் மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பிய நிகழ்ச்சியை விளக்கினாரென்றும், அவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தவரென்றும், 2-3-81ல் துண்டுப் பிரசுரம் விநியோகித்ததற்காக கைதானவர் என்றும் கூறப்பட்டிருந்தது.

ஜூலை 28-ம் தேதி காலை 9 மணிக்கு வெலிக்கடை கைதிகள் மட்டக்களப்பு சிறைக்கு கொண்டு வரப்பட்டு அரை மணிநேரத்திற்குள் ஈழ. ம. பு. வி. முன்னணியை சேர்ந்த இராணுவ பிரிவு கமாண்டர் குணசேகரனிடமிருந்து "உங்களை விடுவித்து செல்ல திட்டம் உள்ளது நீங்கள் தயாரா? என்று செய்தி வந்ததாகவும் அறுபது பேரில் 30 பேர் ஈ. ம. பு. வி. முன்னணியை சேர்ந்தவர்களென்றும் முகுந்

(8ம் பக்கம் பார்க்க)

## ஈழமக்கள் விடுதலைக் கழக சுவரொட்டிகள்

[யாழ்ப்பாணம்]
"மட்டக்களப்பு சிறை உடைப்புக்கு தாமே பொறுப்பாளிகளாவோம்" என்று தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் உரிமைகோரியுள்ள சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்தி பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

"இச்சிறை உடைப்புக்கு சிறு உதவி வழங்கிய ஏனைய இயக்கங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் நன்றி" என்றும் அச்சுவரொட்டிகளில் கூறப்பட்டுளளன.

இதேநேரத்தில் தமிழ்நாடு மாணவர் பேரவையினர் வெளியிட்ட சுவரொட்டிகளும் யாழ். நகரில் ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டிகளில் 'மட்டக்களப்பு சிறையில் இருந்து விடுதலைப் போராளிகளை மீட்டு தமிழகத்திற்கு கொண்டு வந்து சேர்த்த விடுதலைப் போராளிகளையும், சிறையிலிருந்து கொண்டுவரப்பட்ட விடுதலைப் போராளிகளையும் வரவேற்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருந்தன!

## வான் கைப்பற்றப்பட்டது; 3 இளைஞர்கள் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)
சுண்டிக்குளியில் சந்தேகத்திற்கிடமான முறையில்சென்ற வான் ஒன்றை பொலிஸார் ஜீப்பில் துரத்திச் சென்று கைப்பற்றினார்கள்.

அதில் சென்றதாகக் கூறப்படும் 3 இளைஞர்கள் தப்பிவிட்டார்கள்.

சுண்டிக்குளியில் சென்று கொண்டிருந்த இந்த வான், ரோந்து சுற்றிவந்த பொலிஸ் ஜீப்பைக் கண்டதும் வேகமாகச் செல்ல முற்பட்டதாகவும் சந்தேகம்கொண்ட பொலிசார் வானைத் துரத்திச் சென்று குருஸோ வீதியில் கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது. (க)

## சுமித் டி சில்வா விரைவில் விடுதலை

(கொழும்பு)
இலங்கைப் பொறியியலாளர் திரு. சுமித் டி சில்வா சில தினங்களில் விடுதலைசெய்யப்படலாம் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்துள்ளது.

திரு. சுமித் டி சில்வாவின் விடுதலைகுறித்து வெரித்தாஸ் வானொலி தகவல் தெரிவிக்கையில்: திருமதி டி சில்வா, இலங்கையிலுள்ள அவரது தாயாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் கணவர் விரைவில் விடுதலை செய்யப்படலாம் என்றும், ஆனாலும் சில முட்டுக்கட்டைகளைத் தீர்ப்பதில்தான் கஷ்டம் நீடிப்பதாகவும் கூறியது.

திரு. சுமித் டி சில்வா, முஸ்லிம் தீவிரவாதிகளினால் கடந்த ஆகஸ்ட்மாதம் மணிலாவின் தீவுஒன்றில் வைத்து கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.

நாளை ஆரம்பம்
DAY CLASS
84 AUG. A/L விஞ்ஞானம்

MASTER
INSTITUTES
B. M C.LANE, JAFFNA.
9555)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு சக்கர உழவு யந்திரம் (KOBOTA) கொவொட்டா விற்பனைக்கு உண்டு. முகவரி: இராமலிங்கம் குமாரசாமி, நாச்சிமார் கோவிலடி, கைதடி தெற்கு, கைதடி, 9538

சுன்னுகம் பட்டினசபைக்கு எல்லைக்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு முன்பாக 200 யார் தூரத்தில் வீடுகட்ட சற்சதுரமான 4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. ஆ. சி. கணேசவேல், உபதபாற்கந்தோர், கந்தரோடை, சுன்னுகம். 9545

சீமென்ஸ் மோட்டோர் (1 HP, 1445 RPM) நல்ல நிலையில், பம்புடன் விற்பனைக்குண்டு. குமாரன் டூரிஸ்ட் இன், 67, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23753. (9548)

திருநெல்வேலிச் சந்தியில் வியாபார நிலையம் கட்ட மிக உகந்த காணித்துண்டும் (நாலு லட்சம்) 9 ஸ்ரீ வோக்ஸ்வகன் காரும்விற்பனைக்கு. தொடர்பு: 73/1, பலாலி ரோட், கந்தர் மடம். 9409

ஆனைக்கோட்டைக்கும் ஆறுகால் மடத்திற்கும் இடையில் கொக்குவில் போகும் ரோட்டில் பிடாரி கோவில் உபதபால் நிலையத்திற்கு அருகில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு உகந்தநிலம். விபரங்களுக்கு: நாதன் ரெக்ஸ் ரைல்ஸ், 179, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23691. (9503)

யாழ். நகரில்- ஆட்டுகல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுகல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக்கர் அன்கோ, 112, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 9506

யாழ். மணிக்கூட்டு வீதி, B.M.C.க்கு முன்பாக 1பரப்பு 3 குளிக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9535

மானிப்பாய் முதலியார் கனகசபை வீதியிலுள்ள 7 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: வரேந்திரன், 353, நாவலர் வீதி, நல்லூர். 9429

## கல்வி

Radio and Electronic Engineering (Trade Course) by K.Ceylonmoney Electronic Engineer Peradeniya Campus உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, பொறியியல் கல்வி நிலையம், யாழ்ப்பாண கல்வி நிலைய கட்டிடம், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 9518

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

## தேவை

மாவடி ஞானவயிரவ கோவிலுக்கு 3 கால பூசை செய்வதற்கு ஒழுக்கம் பண்புள்ள குருக்கள் நேரில் வரவும். S. முத்துக்குமாரு சன்ஸ், 175, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 9541

பிள்ளைகள் விடுதி ஒன்றில் சமையல் வேலை செய்ய நடுத்தர வயதுள்ள பெண் உடன் தேவை. குடும்பப் பொறுப்பற்றவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். Warden, House of Hope, Inuvil. 9540

விற்பனை பிரதிநிதிகள், விற்பனை மேற்பார்வையாளர்கள், விற்பனை முகாமையாளர், எங்கள் ஸ்தாபனத்திற்குத் தேவை B. C. P. லிமிட்டற், (76)—222, ஆஸ்பத்திரி வீதி, (மேல் மாடி) யாழ்ப்பாணம். 9524

## சேவை

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்தமுறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ரூடியோவை நாடுங்கள். 9145

## புதுப்பிப்பு

(நாரந்தனை)

நாரந்தனை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தற்போது சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ரயில், பஸ், நிலையங்களுக்கு அண்மையில் சகல வசதிகளுடன் ரியூற்றறி வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். எம், ஆர். ஜி. ஐயனுர் கோவிலடி, யாழ்ப்பாணம். 9547

## வகுப்புகள்

Pitman Shorthand and Typing (ENGLISH) வகுப்புகள் 02-11-1983 (புதன்) ஆரம்பமாகவுள்ளது. The Jaffna Education Centre, இராமையா செட்டியார் ஒழுங்கை, (ஆஸ்பத்திரி வீதிக் கிளை) யாழ்ப்பாணம். (சாந்தி சினிமாவிற்கு அண்மை) 9525

## முக்கிய அறிவித்தல் மின்விநியோகம்

1983ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை முக்கியபராமரிப்பு வேலைகள்செய்யும்பொருட்டு அனுராதபுரம்-யாழ்ப்பாணம் 132 கே. வி. மின்மார்க்கம் தடைசெய்ய விருப்பதால் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, சுன்னுகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணைபோன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ். பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் மின்சாரவிநியோகம் தடைப்படும் என அறியத் தருகின்றேன்.

மின்பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்.

9544

## கேள்வி அறிவித்தல் - 1984

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1984ம் ஆண்டு தை மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1984-ம் ஆண்டு மார்கழி மாதம் 31ந் திகதி வரை குத்தகைக்கு/வாடகைக்கு விற்பனை செயவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 7.11.83ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ். அபிவிருத்திச்சபைச் செயலாளரால் ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப்பத்திரங்கள் அவ்வவ் உப அலுவலகங்களால் 3-11-83ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். மூலப்பிரதி யாழ். அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்திலும், இணைப்பிரதி உரிய அலுவலகத்திலும் 7-11-83 ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் பற்றிய முழுவிபரங்களையும், கேள்விப் பத்திரப் பெறுமதி, கேள்விப்பிணைத் தொகை ஆகிய விபரங்களையும் கீழ்க்காணும் உப அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தேவநேசன் நேசையா
யாழ். அபி. சபை அலுவலகம், செயலாளர்.
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.
06-10-83

### உப அலுவலகங்களின் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை | 28. | நெல்லியடி |
| 02. | மானிப்பாய் பட்டணம் | 29. | கிளிநொச்சி |
| 03. | உரும்பிராய் ஊரெழு. | 30. | கொக்குவில் |
| 04. | உடுப்பிட்டி | 31. | நல்லூர் - யாழ்ப்பாணம் |
| 05. | நாரந்தனை | 32. | தெல்லிப்பளை |
| 06. | மல்லாகம் | 33. | மயிலிட்டி |
| 07. | மானிப்பாய் கிராமம் | 34. | அச்சுவேலி |
| 08. | ஏழாலை | 35. | நீர்வேலி |
| 09. | உடுவில் சுன்னுகம் | 36. | சுளிபுரம் |
| 10. | கோப்பாய் | 37. | புலோப்பளை |
| 11. | அனலைதீவு | 38. | நயினாதீவு |
| 12. | நெடுந்தீவு | 39. | வட்டுக்கோட்டை |
| 13. | வேலணை | 40. | மண்டைதீவு |
| 14. | எழுவைதீவு | 41. | அல்லைப்பிட்டி |
| 15. | காரைநகர் வடக்கு | 42. | புங்குடுதீவு |
| 16. | அராலி | 43. | பண்டத்தரிப்பு கிராமம். |
| 17. | காரைநகர் தெற்கு | 44. | புத்தூர் |
| 18. | கட்டைவேலி அல்வாய் | 45. | செம்பியன்பற்று |
| 19. | குடத்தனை | 46. | கச்சாய், கொடிகாமம் |
| 20. | நாவற்குளி | 47. | கைதடி |
| 21. | முள்ளிப்பற்று யக்கச்சி | 48. | மிருசுவில் |
| 22. | இரணைதீவு | 49. | வரணி கொடிகாமம் |
| 23 | புலோலி | 50. | சாவகச்சேரி |
| 24. | சங்கானை | 51. | பூநகரி பரந்தன் |
| 25. | பண்டத்தரிப்பு பட்டணம் | 52. | பல்லவராயன்கட்டு |
| 26. | காங்கேசன்துறை | 53. | கரைச்சி |
| 27. | சுன்னுகம் | 54. | முகமாலை (9267) |


## தேவை

டீசல் வாகனங்கள் (அசோக் லேலண்ட்) திருத்தக்கூடிய நன்கு அனுபவம் உள்ள
மெக்கானிக்கும், உதவியாளர்களும் தேவை.
தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் வரவும்.
தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
உரிமையாளர்:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் ரோட்,
யாழ்ப்பாணம்.
9542

Saibaba
ADVERTISING ASSOCIATES

வாரமலர் அறிமுகம்

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் தமிழ் வாரமலர் ஒன்றுக்கு தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், கலைஞர்கள், விமர்சகர்கள் மற்றும் பலதுறை விற்பன்னர்களிடமிருந்து விடயதானங்கள் வரவேற்கப்படுகின்றன.
பத்திரிகை — நிர்வாகம், விளம்பரம் சேகரிப்பு, விற்பனை நியமனங்கட்கு விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.
தொடர்பு:



சாயிபாபா
அட்வர்டைசிங்
அசோசியேற்ஸ்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(9478)


## கேள்வி அறிவித்தல் - 1984

1. நயினாதீவு குறிகாட்டுவான் பயணச்சேவைவிகாரைத் துறையூடாக.
2. நயினாதீவு தெற்கு இறங்குதுறை துறைமுகத்திற்கும் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கும் இடையிலான பயணச்சேவை.
3. கோயில் இறங்குதுறைக்கும் இறுப்பிட்டி இறங்குதுறைக்கும் இடையிலான பயணச்சேவை.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உப அலுவலகங்களாகிய புங்குடுதீவு, நயினாதீவு ஆகியவற்றின் பூரண ஆணைக்குட்பட்ட கடற் பிராந்தியத்தில் மூன்று பயணச்சேவைகளை நடாத்துவதற்கு ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி எல்லைக்குள் வதியும் படகுகளைச் சொந்தமாக வைத்திருக்கும் தனிநபர்களிடமிருந்தும், சங்கங்களிடமிருந்தும்கேள்விகள்கோரப்படுகின்றன. கேள்விகள் 1983 11-14ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி வைப்புப்பணமாக ரூபா 300/-யையும், கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாக ரூபா 50/-வையும் செலுத்தி மேற்காட்டப்பட்டுள்ள தகுதிகளை ஆவணங்கள் மூலம் நிரூபிப்பதன் பேரில்புங்குடுதீவு, நயினாதீவு உபஅலுவலகங்களில்11-11-83ந்திகதி வரை நண்பகல்12-00மணி வரைகேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வோர் சேவைக்கும் தனித்தனி கேள்விகள் சமர்ப்பிக்கவேண்டும். கேள்விகள் இணைப்பிரதிகளில் நிரப்பப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''படகுச்சேவைக் கேள்விகள் - 1984'' எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் எனக்கு ஒரு பிரதியும் மறுபிரதி கேள்விப்பத்திரம் பெறப்பட்ட உப அலுவலகத்திற்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சித்திகரக் கேள்விக்காரர்கள் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையினுல் நியமிக்கப்பட்ட படகுச்சேவைக்குழுவினுல் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைவாகவும் அவர்களால் தீர்மானிக்கப்படும் கட்டணங்களை அறவிட்டு,

1. நயினாதீவு குறிகாட்டுவான் பயணச்சேவை விகாரைத் துறையூடாக போக 12 சேவைகளும், வரப் 12 சேவைகளும்,
2. நயினாதீவு தெற்கு இறங்குதுறைக்கும், குறிகாட்டுவான் இறங்குதுறைக்கும் போகப் 10 சேவைகளும் வரப் 10 சேவைகளும்,
3. கோவில் துறைக்கும் இறுப்பிட்டித்துறைக்கும் போக 4 சேவைகளும் வர 4 சேவைகளும் நடாத்தப்படுதல் வேண்டும்.

மேற்படி மூன்று சேவைகளில் கேள்வி கிடைக்காத சேவையையோ அல்லது சேவைகளையோசபை குறிப்பிடும் தொகைக்கு சித்திபெற்ற கேள்விக்காரர் எடுத்து நடத்தவேண்டும்.

இக்கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ யாழ் அபிவிருத்திச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை புங்குடுதீவு, நயினாதீவு உபஅலுவலகங்களிலும் யாழ் அபிவிருத்திச்சபையின் தலைமை அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தேவநேசன் நேசையா
செயலாளர்
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை
அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1983-10-20. 9533

# பிரிட்டன், மே. ஜெர்மனியை 5 நிமிடத்தில் நிர்மூலமாக்கும் ஏவுகணைகள்

## செக்கோ, கிழக்கு ஜெர்மனியில் நிறுவ சோவியத் யூனியன் முடிவு!

**மாஸ்கோ, அக், 26**

**பிரிட்டனையும், மே. ஜெர்மனியையும் ஐந்து நிமிடங்களில் நிர்மூலமாக்கும் ஏவுகணைகளை செக்கோஸ்லாவாக்கியாவிலும், கிழக்கு ஜெர்மனியிலும் சோவியத் யூனியன் நிறுவவுள்ளது.**

அமெரிக்கா இந்த வருட இறுதியில் 'நேட்டோ' நாடுகளைப் பாதுகாக்க ஐரோப்பாவில் எம். எக்ஸ். நடுத்தர ஏவுகணைகளைப் பொருத்தவிருப்பதாகக் கூறிவருகிறது. இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சோவியத் யூனியனும், வார்ஸோ நாடுகளைப் பாதுகாக்கத் தனது ஏவுகணைகளையும் செக்கோஸ்லாவாக்கியா, கிழக்கு ஜெர்மனியில் பொருத்தவுள்ளது.

சோவியத் யூனியனின் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' சோவியத்தின் இம்முடிவை நேற்று அறிவித்தது.

'டாஸ்' நேற்று மேலும் தெரிவித்திருப்பதாவது:- ''அமெரிக்கா 'நேட்டோ' நாடுகளைப் பாதுகாக்கப்போவதாகக் கூறி நடுத்தர ஏவுகணைகளை ஐரோப்பாவில் பொருத்தவுள்ளது. ஆனால் மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்கா ஏற்படுத்தவுள்ள பாதுகாப்பு போதியளவு உறுதியுள்ளதாக இருக்க மாட்டாது என்பதை சோவியத் யூனியன் நன்கு அறிந்துள்ளது.

'நேட்டோ' நாடுகளைப் பாதுகாக்க நடுத்தர ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுவ அமெரிக்கா கொண்டுள்ள திட்டம் 'வார்ஸோ' நாடுகளையே மிகவும் பாதிக்கிறது. எனவே அமெரிக்காவின் ஐரோப்பாவிலுள்ள நடுத்தர ஏவுகணைதளங்களைத் தாக்கவே சோவியத்தும் அதன் ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுத்துகிறது.

லண்டன், பொன், ரோம் ஆகிய மூன்று நகரங்களில் அமெரிக்கா எம். எக்ஸ். நடுத்தர ஏவுகணைகளை நிறுத்தி வைக்கவுள்ளது. இந்த ஏவுகணைகள் 75 ஆயிரம் கிலோமீட்டர்கள் சென்று தாக்கக்கூடியவை (கி)

## ''கொள்ளையர்களிடமிருந்து மக்களைக் காக்க வேண்டும்!'' — பொலிஸ் அதிகாரி

(மாவிட்டபுரம்)

''கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துவரும் இன்றைய சூழ்நிலையில் பொலிசாருடைய கடமை மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. கொள்ளையர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற பொலிசார் திறமையுடன் சேவை புரியவேண்டியுள்ளது. ஆகவே பொலிசார் கட்டுக்கோப்பாக இயங்கி தமது கடமையை திறம்படசெய்யவேண்டும்''

இவ்வாறு காங்கேசன்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாக இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திரு. கே. ஆர். இராமச்சந்திரன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

இவ் வைபவத்தில் பேசிய ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் திரு. இராமச்சந்திரன் ஆற்றிய சேவைகளைப் பாராட்டிப் பேசினர். காங்கேசன்துறை பொலிஸ் புதிய பொறுப்பதிகாரி திரு. பிலி அபயசேகராவும் பேசினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

# கிரனடா தீவில் அமெரிக்க கரீபியன்படைகள்பிரவேசம்

## ஜனநாயகத்தை மீட்கும் நடவடிக்கை அமெரிக்க சபாநாயகர் விளக்கம்

வாஷிங்டன், அக். 26

அமெரிக்கத் துருப்புகளும், கரீபியன் துருப்புகளும் ஆயிரக்கணக்கில் கரீபியன் கடலிலுள்ள திரானடா தீவில் இறங்கியுள்ளன.

இத்துருப்புகள் கிரனடாவில் விமான நிலையமொன்றையும், விமானத் திடலொன்றையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளன.

கிரனடாவில் கடந்த வாரம் கிளர்ச்சியாளர்கள் ஜனாதிபதியைச் சுட்டுக்கொன்று ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது தெரிந்ததே. இதனையடுத்து அங்கு தொடர்ந்தும் கிளர்ச்சியாளர்களுக்கும், அரசாங்க ஆதரவாளர்களுக்கு மிடையே பதட்டநிலை நிலவிவருகிறது.

அமெரிக்க காங்கிரஸில் சபாநாயகர் திரு. தோமஸ் ஓ நீல் கிரனடாவில் அமெரிக்கப் படைகள் இறங்கியதுபற்றிக் குறிப்பிடுகையில், ''ஜனநாயகத்தை மீண்டும் திரானடாவில் ஏற்படுத்தும் விதத்திலேயே அமெரிக்க, கரீபியன் துருப்புகள் அங்குசென்றுள்ளன'' என்றார்.

அன்டிகுவா, ஜமெய்க்கா, பாபடோஸ் உட்பட கரீபியன் நாடுகள் சில இப்படையெடுப்பை ஆதரித்துள்ளன. இதேவேளை நிக்கரகுவா இப்படையெடுப்பை ஆட்சேபித்து இதுபற்றி ஐ. நா. வில் தெரிவிக்க முயற்சிக்கின்றது. (கி)

## வ. போ. சபை பதில் தலைவர்

(சுண்டுக்குளி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு எஸ். கனகரட்னம் மலேசியா சென்றிருப்பதால், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் திரு ஆர். ராஜேந்திரம் பதில் தலைவராக போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## லெபனுனுக்கு மேலும் 300 கடற்படையினர்!

### அமெரிக்க, பிரெஞ்சு வீரர் மரணம்பற்றி இந்திரா கவலை

பெய்ரூட், அக். 26

லெபனுனுக்கு மேலும் 300 அமெரிக்க மாலுமித் துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளன இவை நேற்று பெய்ரூட் வந்திறங்கின.

கடந்த வாரம் பெய்ரூட்டில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு ஒன்றில் இருநூறுக்கும் அதிகமான அமெரிக்க மாலுமித் துருப்புகள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்பெரும் இழப்பை ஈடுசெய்யவே அமெரிக்கா மேலும் தனது 300 கடற்படைத் துருப்புகளை பெய்ரூட் அனுப்பிவைத்தது.

ஜனாதிபதி றீகன் பெய்ரூட்டில் அமெரிக்க மாலுமித் துருப்புகள் கொல்லப்பட்டது குறித்து வெள்ளைமாளிகையில் பத்திரிகையாளர்கள் மகாநாடு ஒன்றை நடத்தினர். அம்மகாநாட்டில், 'பெய்ரூட்டில் அமெரிக்கத் துருப்புகள் கொல்லப்பட்ட செயல் சர்வதேச காடைத்தனமாகும்' என்று குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பெய்ரூட்டில் அமெரிக்க, பிரெஞ்சுத் துருப்புகள் கொல்லப்பட்டது குறித்து அவ்விரு நாட்டுத் தலைவர்களுக்கும தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார். அவர், ''சமாதான நோக்கத்துக்காக வந்தவர்கள் இப்படிக் கொல்லப்பட்டிருப்பது வேதனைதருகிறது'' என்று தெரிவித்தார். (கி)

## இந்தியாவுக்கான சூடான் தூதுவர் சுடப்பட்டார்!

புதுடில்லி, அக். 26

இந்தியாவுக்கான சூடான் தூதுவர் இனம் தெரியாத வெளிநாட்டு நபரொருவரினல் நேற்றுப் புதுடில்லியில் சுடப்பட்டார். சூட்டுக் காயங்களுடன் அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இது ஒரு அநாகரிகமான செயல் எனக் குறிப்பிட்டுள்ளார். (சூ)


# விவசாயிகளே !

BAYER

## மோரூட் 80% W. P. (Morut)

விலை : 20 கிராம்ஸ் ரூபா 10-00 100 கிராம்ஸ் ரூபா 40-00.

**பயிர்களைத் தாக்கும்**

அடி அழுகல், வேர் அழுகல், விதைகள் மூலம் பரவும் பூஞ்சண நோய்களையும் சிறப்பாகக் கட்டுப்படுத்தும் 'மோரூட்' பாவித்து சிறந்த பலன் பெறுங்கள்.

இது பலவருடங்களாக உங்களுக்கு சேவையாற்றும்

''பாயர்'' தயாரிப்பு

## போமசொல் போட்டே (Pomosol Forte)

விலை : 100 கிராம்ஸ் ரூபா 15-00

மிளகாய் மற்றும் காய்கறி நாற்றுமேடையில் ஏற்படும் அடி அழுகல், பயிர் அழுகல் போன்ற பூஞ்சண நோய்களை சிறப்பாகக் கட்டுப்படுத்தும் மற்றுமோர் சிறந்த ''பாயர்'' தயாரிப்பு.

# ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு—10.

த. பெ. இல: 70.

### மணிவாக்கு

மேலதிகாரிகளுக்குப் பணிவு, சமமானவர்களுக்கு மரியாதை, கீழுள்ளவர்களுக்கு பெருந்தன்மை- இது ஒருவனின் கடமை.

— பெஞ்சமின் பிராங்க்ளின்

## நமது நோக்கு

# கொள்ளை, களவு, வழிப்பறி!

பத்திரிகைகளில் மக்கள் எதைப் படிக்க விரும்புகிறார்கள்?

பொதுவாகச் சொல்வதானால், தங்களை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் அதி முக்கிய வாழ்க்கைப்பிரச்சினைகளுக்கு ஏதும் நியாயமான தீர்வு ஏற்பட வழி பிறந்துள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ளவே பெரும்பாலானவர்கள் பத்திரிகைகளைப் படிக்கவிரும்புகிறார்கள்.

உலக அறிவைப் பெருக்கிக்கொள்வது, நாட்டின் நடப்புக்களைத் தெரிந்து கொள்வது என்பதெல்லாம் இரண்டாம் பட்சமே.

ஆனால் பத்திரிகையாளர்கள் எதைத் தருகிறார்கள்?

எதைக் கவர்ச்சியான தலைப்புடன் வெளியிட்டால் வாசகரின் கவனத்தைக் கவர்ந்து விற்பனையை அதிகரிக்கலாம் என்ற வியாபார நோக்கம் ஒரு புறம், பத்திரிகை விற்பனையை அதிகரிப்பதின் மூலம் முதலாளிகளை திருப்தி செய்யலாம் என்பது இன்னொரு புறம்.

அரசு சார்புப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அரசுக்கும் அரச அதிகார வர்க்கத்துக்கும் 'ஆலவட்டம்' பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

பரபரப்பூட்டும் செய்திகளுக்கும், அதிகார வர்க்கத்தினால் மூடி மறைக்கப்படும் செய்திகளுக்கும் பொதுப் பத்திரிகைகளில் அதிக இடம் கிடைக்கிறது. இவைகளை முதலில் கொடுப்பது யார் என்பதில் பலத்த போட்டி.

வாசகனைப் பரபரப்பூட்டி செய்தியைப் படிக்கச்செய்து உணர்ச்சிவசமாக்குவது இன்றைய பத்திரிகையுலகின் ஒரு உத்தி முறையாகவுள்ளது.

இன உணர்ச்சியைத் தூண்டி விடுவதின் மூலம் பத்திரிகை வியாபாரத்தை அதிகரித்துக் கொள்வது இன்னொரு வகை ''தேசாபிமான''மாக வியாபித்துள்ளது.

இவை எல்லாவற்றையும் விட இன்றெல்லாம் எந்த ஒரு பத்திரிகையை எடுத்தாலும் கொள்ளை, களவு, வழிப்பறி என்ற வகையில் ஏதாவது ஒரு செய்தி இல்லாத பத்திரிகையே இல்லையெனலாம்.

இச்செய்திகளை முதலில் பிரசுரித்து வாசகர்களைத் திருப்திபடுத்துவதில் பத்திரிகைகளுக்குள் போட்டி.

நமதுமக்களின் வாழ்க்கை சூழ்நிலை இவ்வாறு அச்சத்மாகி வருவது சமூக உணர்வுள்ளவர்களுக்கு கவலையளிக்காமலிருக்காது.

'கொள்ளை, களவு, வழிப்பறி ஒன்றும் நடைபெறவில்லை' என்றவாறு செய்தியொன்று ஒருபத்திரிகையில் வெளிவருமானால் அதுவே நாட்டின் மிகப்பெரிய செய்தியாக மதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகளிருந்து விட்டதை நாம் உணர வேண்டும்.

நாட்டின் பொதுவான நிலைமை இதுவென்றும் தமிழ்ப்பிரதேசங்களில் குறிப்பாக வடபகுதியில் சிலகாலம் ஓய்ந்திருந்த இச்சில்லரைச் சம்பவங்கள் மீண்டும் தலையெடுத்து தமிழ்ப் பத்திரிகைகளில் பெரும்பகுதி இடத்தை அவையே ஆக்கிரமித்துக் கொள்வதைக்காண்கிறோம்.

தெருவில் பெண்கள் பயமின்றி நகையணிந்துசெல்ல முடியாது, வீடுகளில் அமைதியாக உறங்க முடியாது, எந்த நிமிடம் எந்த வேடத்தில் திருடர் வருவர் என்ற பீதி பிடித்து ஆட்டுகிறது.

தெருவில் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடுகிறவனும்கூட ஒரு இயக்கத்தின் பேரைச் சொல்லித் தப்பிக் கொள்ளப்பார்க்கிறான்.

அரசியல் நிலைமைகளாலும், அதிகார வர்க்கத்தின் ஓரவஞ்சகமான நோக்கினாலும் மாத்திரமின்றி அதி பயங்கர இனக்கலவரம் ஒன்றினை எதிர்கொண்டு அனுபவித்துவிட்டு அந்தத் துயரினின்றும் இன்னமும் மீள முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் தமிழ் மக்களை அவர்கள் மத்தியிலிருந்தே கிளம்பியுள்ள இந்தப் புல்லுருவிகளின் சின்னத்தனம் மேலும் துயரத்தில் ஆழ்த்துகிறது. தென்னிலங்கையிலிருந்து ''தப்பிப் பிழைத்தோம்'' என்ற நிலையில் இங்குவந்துள்ள அநேகரை, ''இதற்காகவா இங்கே வந்தோம்'' என்று எண்ணத் தூண்டுகிறது.

இந்த நிலைமை கட்டுப் படுத்தப்படவேண்டும்.

காவல் துறையினரும், அரச அதிகாரிகளும் மாத்திரம் செயல்பட்டால் போதாது சமூக ஸ்தாபனங்கள், தொண்டர் நிலையங்கள், இளைஞர் இயக்கங்கள் போன்றவை ஒன்றுபட்டுத் தீவிரமாகச் செயல்பட்டாக வேண்டும். இல்லையெனில் பரவிவரும் இந்நோய் புரையோடிப்போகவும் - அதுவே வாழ்க்கை அமைப்பாக மாறிவிடவும் ஏதுவாகிவிடும்.

## ''கிராமங்களிலும் முதலுதவி பற்றிய அறிவை வளர்க்க வேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''வயது வந்தவர்கள் அனைவரும் முதலுதவி பற்றிய அறிவை அவசியம் பெற்றிருக்க வேண்டும். அவ் அறிவின் மூலம் ஒருவர் தமக்கும், மற்றும் முதலுதவி தேவைப்படுபவர்களுக்கும் சிறந்த சேவையை வழங்க முடியும். எனவே முதலுதவி பற்றிய அறிவை சென் ஜோன் அம்புலன்ஸ் போன்ற முதலுதவிக் கழகங்களின் உதவியுடன் கிராமங்களிலும், சமூகங்களிடையேயும் வளர்க்கவேண்டும்.''

யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. பீ எல். பட்றிக் சென் ஜோன் அம்புலன்ஸ் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமைதாங்கி மேற்கண்டவாறுகூறினார். இக்கூட்டம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த வாரம் நிகழ்ந்தது

சென். ஜோன் அம்புலன்ஸ் வடபிராந்திய ஆணையாளர் திரு. சீ. எஸ். சுப்பிரமணியம் இக்கூட்டத்தில் சென்ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் நோக்கங்கள், மற்றும் கடமைகள் என்பனவற்றை எடுத்து விளக்கினார்.

இக் கூட்டத்தின் இறுதியில் நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது. தலைவர்: திரு. தேவநேசன் நேசையா (யாழ் அரசாங்க அதிபர்) உபதலைவர்கள்: திரு. எம். சிமியாம்பிள்ளை (கல்விப் பணிப்பாளர்), வைத்திய கலாநிதி கே. மாணிக்கம், வைத்திய கலாநிதி சீ. நச்சினார்க்கினியன், திரு கே. கங்காதரன் (சமூக சேவை உதவிப் பணிப்பாளர்).

# வடமுனை

நேரில் சென்று நிலைமையைப் பார்த்து எழுதுகிறார்

பா. அனந்தகிருஷ்ணன்

[1]

கிழக்கிலங்கையில் மதுறு ஓயாவை எல்லையாகக்கொண்ட கல்குடா தொகுதியில் அடங்கும் 'வடமுனைப்' பிரதேசம் இன்று இலங்கையில் சகலரது கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்திருக்கிறது!

ஜூலை கலவரங்களில் பெரும் இன்னல்களை தமிழினம் கண்டது உலகறிந்த விடயம். அந்த இனத்துக்கு மேலும் சோதனையும், வேதனையும் தருவதாகவே கிழக்கிலங்கையில் உள்ள வடமுனைப் பிரதேசம் இன்று காணப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்கள் என்று மார்தட்டியவர்களும் இன்று தம்மை அவ்வாறு குறிப்பிட நடுங்குகின்றனர். இந்நிலையில் வடமுனை விவகாரம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் அவர்களும் பாலஸ்தீனர்கள் போல் நாடற்றவர்களாகலாமென்பதை உணர்த்துவதாகவே அமைகின்றது.

இன்று நாளாந்த தினசரிகளில் சூடுபிடித்துள்ள அம்சம் வடமுனை விவகாரமாகும். கிழக்கிலங்கை வாழ் தமிழர்களையும், தமிழ்பேசும் முஸ்லிம்களையும் இந்த வடமுனைப் பிரச்னை நாளுக்கு நாள் அச்சுறுத்தியே வருகின்றது!

### கல்குடா தொகுதியும் வடமுனையும்

மட்டக்களப்பை அண்டிய பிரதேசம் கல்குடா தொகுதி. அதனை ஒரு தமிழரே பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தி அவர் அமைச்சராக இருந்துவருகிறார் என்பதையே இலங்கைத் தமிழர்களாகிய அநேகர் அறிந்துவைத்துள்ளனர். ஆனால் அத் தொகுதி பற்றியும் அதன்மூலம் தமிழர்கள் அடையக்கூடிய வாய்ப்புகள், இழப்புகள் பற்றியும் அறிந்துவைத்திருப்பவர்கள் மிகச் சிலரே.

மட்டக்களப்புக்கு வடக்கே அமைந்திருக்கும், கல்குடாத் தொகுதியின் மேற்கு எல்லையாக குறிப்பிடத்தக்களவு நீளத்தை மதுறு ஓயா ஆறு கொண்டுள்ளது. இந்த ஆற்றுக்கு மேற்கே பொலனறுவ தொகுதி அமைந்துள்ளது. இதற்கு கிழக்கிலேயே கல்குடா தொகுதியில் வடமுனை அமைந்துள்ளது

### தமிழ்ப்பிரதேசம் துண்டாடப்படும்நிலை

எனவே கிழக்கிலங்கையில் பரந்த பெரும் தமிழ் பிரதேசமான மட்டக்களப்புப் பகுதியை சங்கிலித் தொடராக திருகோணமலையுடனும் மேலும் வடக்கே முல்லைத்தீவு ஊடாக யாழ்ப்பாணம்வரையும் இணைக்கும் ஒரு சங்கிலி வளையமாகவே கல்குடா தொகுதி அமைந்துள்ளது,

## ''மகாவலி பாயும் இடமெல்லாம் நாமும் குடியேறுவோம்''

ஆனால் இன்று வடமுனையில் நிலவிவரும் சூழ்நிலை, இச்சங்கிலித் தொடர் அமைப்பிலுள்ள கல்குடா தொகுதியை அறுத்து, ஒரு பரந்து நீண்ட தமிழ்ப்பிரதேசத்தை எதிர்காலத்தில் துண்டாடச் செய்யும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

### மதுறுஓயா திட்ட வலயம்

கடந்த செப்டெம்பர் மாத ஆரம்பத்திலேயே வடமுனையில் நெருக்கடிநிலை ஆரம்பமாகத் தொடங்கியது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஒருபகுதி மதுறுஓயா திட்டமாகும். எனவே கல்குடாத் தொகுதியின் வடமுனைப் பிரதேசம் மதுறு ஓயாவை அடுத்து மதுறு ஓயாத்திட்டத்தின் ஆறுவது வலயத்தில் அடங்குகின்றது.

மதுறுஓயாத் திட்டம் பூர்த்தியடைந்து நீர்ப்பாசன ஒழுங்குகள் சீரானதும் பெரும்பயனளிக்கும் விளைநிலங்களில் ஒன்றாக வடமுனை மாறிவிடும். இம் மாற்றத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டியவர்களை பலாத்காரமாகத் தடுத்து தாம் மட்டும் இதனை அனுபவித்து தமது கையை இப்பிரதேசத்தில் ஓங்கச்செய்ய வேண்டுமென்று சுயநலக்கூட்டமொன்று கங்கணம்கட்டி நிற்கிறது. அக் கூட்டத்தினால் தோன்றியுள்ள நெருக்கடி நிலையே இன்று வடமுனையை சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

### வடமுனை நாயகன்

வண திம்புலாகம சீலலங்கா நாயக்கதேரோ.

இவரே வடமுனை விவகாரத்தின் நாயகனாகத் திகழ்கிறார்.

'மகாவலி நீர் எப்பிரதேசங்களிலெல்லாம் பாய்கிறதோ அங்கெல்லாம் நமது இனத்தவர்களும் சென்று குடியேறுவார்கள்' என்று இவர் தமது குடியேற்றவாதத்தின் நோக்கத்தை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

இப் பௌத்தமத சந்நியாசியே வடமுனையில்அத்துமீறிய குடியேற்றத்தை திட்டமிட்டு மேற்கொண்டுள்ளார், கடந்த ஜூலை மாதப் பகுதியில் சிங்களப் பத்திரிகையொன்றின் மூலமாக தம்மால் காணிகள் வழங்கப்படவிருப்பதாகவும் அக்காணிகளைப் பெறவிரும்புவோர் தம்மிடம் விண்ணப்பிக்கும்படியும் இவர் விளம்பரம் செய்திருந்தார். இவ் விளம்பரத்தைத் தொடர்ந்தே இவர் வாகனங்கள் பலவற்றில் சிங்கள மக்களை ஏற்றி வந்து வடமுனையில் அத்துமீறிக்குடியேற்றங்களை மேற்கொண்டார்,

### அரச அதிபர் அறிக்கை

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து இந்த அத்துமீறிய குடியேற்றத்தைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்ட அமைச்சருக்கும் அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையின்படி வடமுனை, மீரான்டாவில்லு ஆகிய பகுதிகளில் அத்துமீறியுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 15 ஆயிரம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசவாகனங்கள்

அத்துடன் அரசாங்க அதிபர் திரு. அந்தோனிமுத்து இந்த அத்துமீறிய செயலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விபரங்களையும் வெளியிட்டுள்ளார்.

அவ்வாகனங்களில் மகாவலி அபிவிருத்தித் திட்ட அதிகார சபைக்குச் சொந்தமான மூன்று ஜீப் வண்டிகள், அச்சபைக்கே சொந்தமான இரு லொறி வண்டிகள், மலேரியாத் தடுப்புக் காரியாலயத்தின் ஜீப் வண்டி ஒன்று, ஹசகல என்ற இடத்தைச் சேர்ந்த இ.போ. ச. பஸ் வண்டியொன்று ஆகியனவும் அடங்குகின்றன. இவற்றை விடப் பல தனியார் வாகனங்களும் இந்த அத்துமீறிய குடியேற்றத்துக்குக் கணிசமான அளவு பாவிக்கப்பட்டுள்ளன.

### குடையே பதில் சொல்லும்

இக்குடியேற்றத்தின் நாயகன் வண. திம்புலாகம தமது நிலையை விட்டுக்கொடுப்பவராகக் காணப்படவில்லை கல்குடாத் தொகுதி உறுப்பினரும், அமைச்சருமான திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், மற்றும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகச் சில அரசியல்வாதிகள் ஆகியோரும். இந்தத் தேரோவை அணுகி வடமுனை அத்துமீறிய குடியேற்றத்தைக் கைவிடும்படி கேட்டனர். ஆனால் அவரோ தமது நிலையில் பிடிவாதமாகவே உள்ளார்.

அண்மையில் அரசாங்கக் கட்சி உறுப்பினரான திரு. போல் பெரேரா, திம்புலாகம தேரோவைச் சந்தித்து வடமுனைக் குடியேற்றத்தைக் கைவிடும்படி கேட்டார். ஆனால் அவர் திரு. பெரேராவை எச்சரித்ததுடன், ''வடமுனைபற்றி மேலும் பேசினால் எனது குடையினாலேயே இனிப் பதில் கிடைக்கும்'' என்று முன்னெச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

(தொடரும்)

## உலக உணவு தினம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியில் உலக உணவு தினமும், மரம் நாட்டு விழாவும் கல்லூரி அதிபர் திரு வி. பொன்னுத்துரை தலைமையில் கொண்டாடப்பட்டது.

விவசாய ஆசிரியை திருமதி ஆர். அயூப், கனிஷ்டபிரிவு அதிபர் திரு ஏ ஜி. பெர்ணண்டோ திரு என். கணேசமூர்த்தி ஆகியோர் போஷாக்கு உணவின் மகத்துவம் பற்றியும் உலக உணவு விவசாய நிறுவனம் பற்றியும் இக்கூட்டத்தில் கருத்துரை நிகழ்த்தினர். இப்பில் இப்பில், சஞ்சீவி போன்ற மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

(சூ)

'யாழ்ப்பாணம் திரை அரங்குகள்:

# தொழிலாளர் வேலைநீக்கப் பழியை மாநகரசபைமீது சுமத்த வேண்டாம்"

## ஆணையாளர் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சில தியேட்டர் சொந்தக்காரர்கள் மாநகரசபை ஏதோ மேலதிக வரி விதிப்பதாகவும் இதனுல் தியேட்டருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக தொழிலாளர்களைக் குறைக்க வேண்டியுள்ளதாகவும் கூறி மாநகரசபை மீது பழி சுமத்துகிறது தியேட்டர் சொந்தக்காரர்கள் கூறும் காரணங்கள் உண்மைக்குப் புறம்பானது. மாநகரசபை விதித்திருப்பது சட்டப்படியான வரியே''.

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம், யாழ்ப்பாண நகர தியேட்டர் உரிமையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

''மாநகராட்சி மன்றத்திற்கு எந்தவித அறிவித்தலுமின்றி தியேட்டர்களில் எரிபொருள் மேலதிகக் கட்டணம் அறவிட ஆரம்பித்தபோது மன்றத்தின் களியாட்டவரி உத்தியோகத்தர்கள் இதுபற்றி எனது கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

நான் இதுபற்றி உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சுக்கு அறிவித்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை பற்றி ஆலோசனை கேட்டிருந்தேன். அவர்கள், மேலதிக கட்டணத்திற்கு களியாட்டவரி அறவிடப்பட வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்து மேலும் சட்ட ஆலோசனைகளை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளும்படி தெரிவித்தார்கள். அதன்படி மன்றத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியின் அபிப்பிராயம் கோரப்பட்டது. அவர் தனது அபிப்பிராயத்தில் இந்த விடயத்தில் சட்டத்தின் நிலையை விளக்கி களியாட்டவரி அறவிடப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளார்.

''திரைப்படம் பார்ப்பதற்கு ரசிகர்கள் அனுமதிக்கப்படுவதற்கு அறவிடப்படும் கட்டணம், அது என்ன பெயரில் அறவிடப்பட்டாலும் அதன் மீது களியாட்டவரி அறவிடப்படவேண்டும் என்பதுதான்சட்டம். உண்மை அப்படியிருக்கையில் மாநகராட்சி மன்றம் ஏதோ மேலதிக வரியை விதித்திருப்பதாகக் காண்பித்து அதனுல் திரை அரங்குகளுக்கு நஷ்டம் ஏற்படுவதாகவும், தொழிலாளர்களைக் குறைக்க வேண்டியுள்ளது எனவும் சில திரை அரங்குகளின் சொந்தக்காரர்கள் காண்பிக்க முற்படுவதாக எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது உண்மைக்கு மாறுனது என்பதோடு வேறு காரணங்களுக்காக தொழிலாளரை குறைக்க முற்படும் திரை அரங்கு சொந்தக் காரர்கள் அதற்கான காரணத்தை என் மீது தவருக சுமத்த முயற்சி செய்வதாக அறியப்படுகிறது. அதேநேரத்தில் ஏனைய சில படமாளிகை உரிமையாளர்கள் எந்தவொரு தொழிலாளியையும் வேலைநீக்கம் செய்யாதிருப்பதும் நாம் அறிந்ததே. சொந்த விருப்பத்தின்பேரில் எடுக்கப்படும் தொழிலாளர் வேலைநீக்க முடிவுக்கான பழியை மாநகராட்சி மன்றத்தின் மீதோ அல்லது என்மீதோ சுமத்துவது நியாயமல்ல.'' [க]

# இளம் வயதிலேயே அரசியலில் புகுந்த தலைவர்

இலங்கையின் சுதந்திரத்திற்கும சம நீதிக்குமாக முதன் முதலில் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர் தொடுத்து, அவர்களால் கைது செய்யப்பட்டு, சிறையிலிருந்து தப்பி வேற்று நாடுகளுக்குச் சென்று, அதே போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திய இடதுசாரித் தலைவர்களைப் பற்றி அறியாதார் இலர்.

இவர்களிற் பலர் இன்றும் நம்மிடையே அரசியலில் ஈடுபட்டிருக்கிறுர்கள். பலர் அண்மைக் காலங்களிலேயே மறைந்திருக்கிறுர்கள். இவர்களில் ஒருவர்தான் சில நாட்களுக்கு முன் மறைந்த லங்கா சமசமாஜக் கட்சியைச் சார்ந்த அதன் மத்திய குழு அங்கத்தவராகிய தோழர் வை. காராளசிங்கம். சென்னையில் பிரபல தொழிற் சங்கவாதியாகவிருந்த திரு. அந்தோனிப்பிள்ளை இன்னெருவராவார்.

மிகவும் இளம் வயதிலேயே அக்காலத்தில் பிரபல்யமாகவிருந்த திரு. ஹன்டி பேரின்பநாயகம் முதலிய தலைவர்களைக் கொண்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் செயற்பாடுகளினுல் உந்தப்பட்டு, தனது பத்தொன்பதாவது வயதிலேயே அக்காலத்தில் சமசமாஜக் கட்சியின் முன்னேடியாகவிருந்த பி.எல். எஸ். கட்சியில் சேர்ந்தார்,

தனது மேற்படிப்பிலும் அக்கறை செலுத்தாது 194'ம் ஆண்டு கல்கத்தா நகர் சென்று யாதுமொரு முன்னனுபவமும் இல்லாமல், பல பகுத்தறிவாளர்களைக் கொண்ட வங்க தேசத்தில் 'த பேமனன்ட் றெவலூஷன்' என்ற பத்திரிகையை நடத்திவரும்போது 1942ம் ஆண்டில் மகாத்மா காந்தியினுல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மறு கட்சிகளுடன் சேர்ந்து ஈடுபட்டார்.

1945ம் ஆண்டு பிரித்தானிய அரசினுல் மற்றைய தலைவர்களுடன் மீண்டும் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டார். சிறையிலிருந்து வெளியேறிய பின் இங்கிலாந்து சென்று, நான்காம் அகிலத்துடன் தொடர்பு வைத்துக்கொண்டே தனது துண்டிக்கப்பட்ட மேற்படிப்பைத் தொடர்ந்து 1957ம்ஆண்டில் பாரிஸ்டர் பட்டம்பெற்று நாடு திரும்பி அந்சியலில் தீவிரமாக ஈடுபட்டார்.

இரு தடவைகள் காங்கேசன் துறையிலும் உடுவில் தொகுதியிலும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுக் கணிசமான அளவு வாக்குகளையும் பெற்றெடுத்தார்.

இவர் வெளியிட்ட பல அரசியல் கைநூல்களில் பிரபல்யமானது 'த வே அவுட் பொ த டமில்ஸ்' என்பதாகும். தென்னிலங்கையில் உள்ள இடதுசாரி இயக்கங்களைப் பலப்படுத்தி அவர்களுடன் ஒத்துழைத்தாலன்றித் தமிழ் மக்கள் நிலை மிகவும் மோசமடையும் என்பதே நூலின் சாராம்சம். இதன் மறு பதிப்பு சில சேர்க்கைகளுடன் 1977ம் ஆண்டு வெளிவந்தது.

''தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை' என்ற பதத்தை அரசியல் அகராதியில் புகுத்திய பெருமை இவரையே சாரும்.

கடந்த சில மாதங்கள் நோய் வாய்ப்பட்டிருந்தமையால் அரசியலிலிருந்து ஒதுங்கி தனது 61வது வயதில் சில தினங்கட்கு முன் மறைந்தார் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் முகாந்திரம் ஈ. பி. ராசையாவின் மருமகளைத்திருமணம் முடித்திருந்தார்.

இ. ஆறுமுகம்

## சிரேட்ட சட்டத்தரணி

நினைப்பதைச் சொல்வதும் சொல்வதைக் கடைப்பிடிப்பதும் பிறரையும் அவ்வாறே எதிர்பார்ப்பதும் கனவான் ஒருவருக்கே உரிய பண்புகள் என்றுல், அந்தப் பண்பிலே தலைநின்றவர், சென்ற சனிக்கிழமை அமரரான பிரபல சட்டத்தரணி த. சோமசுந்தரம் அவர்கள். எமது முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தின் தொடக்க காலத்திலிருந்து அதன் புரவலர்களுள் ஒருவராய் விளங்கி நிதியாலும் பிறவகைகளாலும் உறுதுணை புரிந்துவந்தவர் இப்பெரியார்.

'விருந்து வந்தவர்க்கு' முகமலர்ந்து உபசாரம் செய்வது அவரின் பிறவிக்குணம். தமிழ் மறைக் கழகத்தினர் கோப்பாயில் எடுத்த திருவள்ளுவர் மாநாட்டிற்கு வருகைபுரிந்த பேராசிரியர் திருநாவுக்கரசு அவர்களுக்கு தமது இல்லத்தில் அவர் அளித்த உபசாரம் ஒரு இனிய உதாரணம்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் தலைவரான அவர் சேக்கிழார்பெருமான் காட்டிய அடியாரின் வரிசையை நன்கு உணர்ந்து அவர்களின் வழியிலேயே நடக்க முயன்றுர்; திருவள்ளுவப் பெருந்தகையின் இல்லறக் குறிக்கோள்களில் பெரிதும் பற்றுக்கொண்டவராய் விளங்கினுர்

பிரபல சிரேட்ட சட்டத்தரணியாய் விளங்கிய அவர்



அமரர்

த. சோமசுந்தரம்

எப்பொழுதும் எதிலும் சட்ட ஒழுங்கையும், நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்த்ததிலே தவறில்லை.

பல சைவ ஆலயங்களின் தருமகருத்தா சபைகளிலே முதன்மையான அங்கம் வகித்துச் சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய சிவப்பணிகள் பல. சிவனை நினைந்து ஆர் கெட்டார்? சிவனை மறந்து ஆர் வாழ்ந்தார்?

சோமசுந்தரம் அவர்கள் தக்கார் என்பதற்கு அவரின் எச்சங்களாகிய மக்கள் சான்றுகளாவர். பொறியியல், வைத்தியம் ஆகிய துறைகளிலே உயர்பட்டங்கள் பல பெற்று அவர்கள் கனடாவில் உயர் பதவி வகித்துவருகின்றுர்கள். 'கன்றும் உதவும் கனி' என்ற பொன்மொழிக்கிணங்க உதாரண புருஷர்களாய் அவர்கள் வாழ்வார்கள் என்று நம்பலாம். அவர்களின் வாழ்க்கையே தந்தையாரின் நிலைத்த நினைவுச் சின்னமாகும். சோமசுந்தரம் அவர்களின் ஆன்மா சாந்தி அடைக!

க. சொக்கலிங்கம்

## புனித யூதாததேயூ ஐப்பசி திருவிழா



(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை புனித யூதாததேயூ ஆலய ஐப்பசி திருவிழா இன்று வியாழக் கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் திருப்பலியுடன் ஆரம்பமாகி 28ந் திகதி காலை திருநாள் திருப்பலியும் நோயாளரை ஆசீர்வதிக் திருச்சடங்கும் திரு சொருப ஆசீரும் அருளப்படும்.

ஆலயத்தில் வாராவாரம் வெள்ளிக் கிழமை மாலையும், ஞாயிறு காலையும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அரியாலை பங்கின் ஆராதனைகளை பங்குதந்தை அருட்திரு குலாஸ் அடிகளார் ஒழுங்கு மேற்கொண்டு பரிபாலித்து வருகிறுர்.

## பொன்னுடை கௌரவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப்பகுதியில் சமயத்தொண்டுகள் பல புரிந்து வரும் திரு. என். எஸ். வி. வைத்திலிங்கம் அவர்களின் சேவையை கௌரவிக்குமுகமாக கனகபுரம் இந்துமாமன்ற உறுப்பினர்கள் பொன்னுடை போர்த்தி கௌரவித்தனர்.

கனகபுரம் கிருஷ்ணர் ஆலயத்தில் இவ்வைபவம் இடம் பெற்றது.


உங்கள் குடும்பத்தினர் உணவை விரும்பிச் சுவைப்பதன் இரகசியம் அஜி-நொ-மோட்டோ!




உங்கள் சமையலை குடும்பத்திலுள்ள அனைவரும் ஆவலுடன் உண்ண வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இன்றே. அஜி-நொ- மோட்டோவின் துணையை நாடுங்கள். அஜி-நொ-மோட்டோ நீங்கள் சமைக்கும் உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குகின்றது. கறி, சோறு, சம்பல், சூப் முதலிய எவ்வகை உணவிலும் சேர்க்கலாம். கரும்பு, பீட்றூட், மரவள்ளி ஆகியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து, பெறப்படும் அஜி-நொ-மோட்டோவை 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறுர்கள்.

சந்தைப்படுத்துவோர்: கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவ

விலை: ரு.1/20 ல் இருந்து

அஜி-நொ-மோட்டோ®

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Minds/AJM 0005

# ஐ. நா.வில் தி மு. க. சமர்ப்பித்த மனு!

(நியுயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையில் திராவிட முன்னேற்றக் கழகம், இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக சமர்ப்பித்த மனுவில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

(நேற்றையத் தொடர்ச்சி)

'யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கந்தர்மடம் என்ற இடத்திலும் திருநெல்வேலி என்ற இடத்திலும் தமிழர்களின் வீடுகள் அனைத்தும் தாக்கப்பட்டன, சூறையாடப்பட்டன. திருகோணமலை தமிழர்கள் மீது மற்ற பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முன்பாகவே தாக்குதல் நடத்தப்பட்டு விட்டது. இத்தாக்குதல் ஜூன் மாதம் 3-ம் திகதி சிங்கள இராணுவத்தாலும் பொலிசாராலும்தொடக்கப்பட்டது.

'சில இடங்களில் கப்பற் படையினர் நேரடியாகவே தாக்குதல் நடத்தினர். மற்றும் சில இடங்களில் கலவரம் குறித்து புலனுய்வு செய்யப் போகிறோம் என்ற பெயரில் சிங்களவரின் தாக்குதலை எதிர்த்த தமிழ் இளைஞர்களையெல்லாம் கைது செய்தனர். கப்பற்படை அந்த இடத்திலிருந்து சென்ற சிறிதுநேரத்திற்கெல்லாம் சிங்களவர்கள் வன்முறையைத் தொடங்கி தமிழர்களின் இல்லங்களைத் தீ வைத்துக் கொளுத்தினர்.

சிங்கள அமைச்சர் ஒருவரின் உதவியாளர் ஒருவர் திருக்கோணமலையில் நடந்த சம்பவங்களின் போது இராணுவத்துடனும், பொலிஸ் அதிகாரிகளுடனும் கலந்து பேசியதற்கும் வன்முறைச் சம்பவங்கள் நடந்த இடத்தில் இருந்ததற்கும் தக்க ஆதாரங்கள் உள்ளன.

## 24-ம் திகதி இரவு...

24-ம் திகதி இரவு கொழும்பு நகரத்தில் இலங்கை அதிபரின் இருப்பிடத்திற்கு வெகு அருகிலேயே தமிழர்களின் வீடுகளும் கடைகளும் சிங்கள குண்டர்களால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டன, பொலிஸ் அதிகாரிகளும், மற்ற உயர் அதிகாரிகளும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட எந்த வித முயற்சியும் மேற்கொள்ளாததோடு அந்தத் தாக்குதலில் அவர்களும் சேர்ந்து கொண்டனர். கொழும்பிலுள்ள பொரளை பகுதியில் இருந்த பெரும்பாலான கடைகளும் வீடுகளும் சிங்களவர்களால் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டதுடன் அவற்றிலிருந்த தமிழர்களும் தாக்கப்பட்டனர். ராணுவத்தினரோ தாக்குதலில் ஈடுபட்ட சிங்களவர்களுக்கு கை வெடி குண்டுகளை அளித்து மேலும் மேலும் தாக்குதலில் ஈடுபடுமாறு உற்சாகப்படுத்தினர். தாக்கப்பட்ட தமிழர்களின் உடல்கள்மீது பெட்ரோல் ஊற்றப்பட்டு தெருவிலேயே அவை எரிக்கப்பட்டன.

## எதிர்த்தவர்க்கு நேர்ந்த கதி

கொழும்பிலும் பதுளையிலும் மற்ற பகுதிகளிலும் தாக்குதலைத் தடுத்த, எதிர்த்த தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பதுளையிலுள்ள யோகம் ஸ்டோர்ஸ் என்ற கடைக்கு முன்னர் சிங்களவர்களின் தாக்குதலை எதிர்த்த 16 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதில் சுந்தரம் என்பவரும் அவரது நான்கு மகன்களும் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் மீது டயர்களை அடுக்கி அடையாளமே தெரியாத அளவுக்கு எரித்து சாம்பலாக்கி விட்டனர் இராணுவத்தினர்.

'பதுளையில் நடைபெற்ற இந்த படுகொலையில் இராணுவத்தினரும் பொலிசாரும் நேரடியாக ஈடுபட்டதை மூன்று குழந்தைகளுக்கு தாயான திருமதி சில்வமணி கணேசன் (36) நேரடியாகவே கண்டிருக்கிறார்.

''அவரது கூற்றுப்படி ஜூலை மாதம் 27ம் தேதி காலை 10 மணியளவில் அவரது வீட்டிலிருந்து நூறுகெஜ தூரத்திலுள்ள ஒரு பஸ் டிப்போவின் முன் ஒரு கூட்டம்கூடி அந்த வழியாகச் சென்ற வாகனங்களைத் தாக்க ஆரம்பித்தது. இந்தத் தாக்குதல் சம்பவம் பற்றி பொலிசாருக்கு தொலைபேசிமூலம் தகவல் தரப்பட்டும்கூட அதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அடுத்து அந்த வன்முறை கும்பல் சில்வமணி கணேசனின் பக்கத்து வீட்டுக்காரரான ராமநாதன் என்பவரைத் தாக்கத் தொடங்கியது. இவர் கற்பூர வியாபாரியென அந்தப்பகுதியில் நன்கு அறியப்பட்டவர். இவர் அந்தக் கும்பலின்மீது திருப்பிச் சுட்டார். யாரையும் காயப்படுத்தாமலே! ராமநாதனின் பதினைந்து வயது மகன் ஒரு குடையுடன் (அப்போதுமழை பெய்துகொண்டிருந்ததால்) அவரது வீட்டுக் கூரையின் மீது ஏறுகையில் ஒரு ராணுவ வீரனல் சுடப்பட்டான்.

## கண்கண்ட காட்சிகள்

சில்வமணி கணேசன் என்ற அந்தப் பெண்குழந்தைகளுடன் தன் அத்தை வீட்டுக்கு தப்பியோடி அங்கே குழந்தைகளுடன் குளியலறையில் மறைந்திருந்தார். அவர் வெளியே துப்பாக்கிவேட்டு சத்தங்களையும் பின்னர்வெடிச் சத்தத்தையும் கேட்டார். அவர்கள் குளியலறையை விட்டு ஓடிவந்தார்கள். வீடு பற்றி எரிவதைக் கண்டார்கள்.

''மெயின் வீதியில் திரு. இராமநாதன் வீட்டு எதிரே பிணங்கள் குவியல்குவியலாகக் கிடந்தன. அதில் அவரது கணவர், மைத்துனர், நாத்தனாரின் கணவர் ஆகியோரது பிணங்களும் கிடந்தன. அவை அனைத்தும் துப்பாக்கிக் குண்டுக் காயங்களுடன் காணப்பட்டன. அவரும் அவரது ஒன்பது வயதும் ஏழு வயதுமான புதல்விகளும் ஐந்து வயதான புதல்வனும் அவரது கணவரின் குடல் வெளியே சரிவதைக் கண்டனர்; அவரதுதலை உருக்குலைக்கப்பட்டிருந்தது; முடமாகிப் படுக்கையிலேயே கிடந்த அவரது மாமனாரும் பிற உறவினர்களும் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். இராமநாதனது வீட்டு ஆண்கள்;இனவெறிக் கும்பலால், வெட்டியும் அடித்தும் கொல்லப்பட்டிருந்தனர். அந்த அம்மையாரும் அவரது குழந்தைகளும் சாட்சிசொல்லத் தயார்.

''1983 ஜூலை 25 அதிகாலை! திட்டமிட்ட இனவெறிக் கும்பல், பொரளை, தெமட்டகொடை. நாரஹென்பிட்டியா ஆகிய பகுதிகளில் தமிழர்களின் வீடுகள் மற்றும் கடைகள் பெரும்பாலானவற்றை தாக்கினர்: தமிழர்களின் பிணங்கள் வீதிகளில் கிடந்தன; ஆனாலும் அந்தோ! வன்முறையைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை?

## மோசமான சம்பவங்கள்

''ஜூலை 25 அன்று காலை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பகுதி இராணுவப் படையினர் கொழும்புக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் அரசாங்க வாகனங்களில் வந்து சேர்ந்தனர். கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தமிழருக்குச் சொந்தமான வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் தரும் பட்டியல்கள்- மிக எச்சரிக்கையாகத் தயாரிக்கப்பட்ட பட்டியல்கள்- அவர்களிடம் இருந்தன?

''கும்பல்கள் தமது வாகனங்களிலிருந்து இறங்கின; வழியே சென்ற கார்களை நிறுத்தி பெட்ரோல் எடுத்தன; தமிழர்களின் கடைகளுக்கும் வீடுகளுக்கும் சென்றன: அங்கே இருந்தவர்களைத் தாக்கின; அவர்களுக்குத் தீ வைத்தன; இந்த வன்முறையில் வேடிக்கை பார்த்த பலரும் கலந்துகொண்டனர். கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடித்தனர். தமிழர் இருபது பேர் பயணம் செய்த சிறு பேருந்து ஒன்று சிங்களவர்களால் நிறுத்தப்பட்டது. வண்டியின் மீது பெட்ரோல் ஊற்றப்பட்டு தீவைக்கப்பட்டது. அந்த வண்டியின் கதவுகளெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன. அதிலிருந்தவர்கள் எரிந்து சாவதை ஏராளமான சிங்களவர்கள் கண்காணித்துக்கொண்டிருந்தனர். பல இடங்களில்-அந்த இடங்களில் வசித்தவர்கள் அவரவர் உடைமைகளோடு தீயில் தூக்கிப் போடப்பட்டனர். எதிர்ப்புத்தெரிவித்தவர்கள் அல்லது தம்மைக் காத்துக்கொள்ள முயன்றவர்கள், ஆயுதப்படையாலும், காவல்துறையாலும் தாக்கப்பட்டனர்; அவர்கள் 'விடுதலைப் புலிகள்' தமிழர் விடுதலை இயக்க உறுப்பினர்கள்) என்று பட்டம் கட்டப்பட்டு, துப்பாக்கி முனையில் குத்தியும் கொல்லப்பட்டனர்.

## வீடியோ படத்தில்

''கொழும்பு நகரில் செட்டியார் தெருவில் ஜூலை 29 அன்று சம்பவம் ஒன்று நடந்தது. அங்கே தம் கடைகளைக் காத்துக்கொண்டிருந்த தமிழர் இருபத்தொருவர் ஆயுதப் படையால் சுட்டுக்கொல்லப் பட்டுவிட்டனர். இந்தக்கொடூரத்திற்கு நேரிற் கண்ட சாட்சிகள் உண்டு!

''செய்தி தணிக்கை கடுமையாக இருந்தது; வெளிநாட்டுச் செய்தியாளர்கள்இலங்கையின் உள்பகுதிக்கும் மலையகத்திற்கும் செல்ல அனுமதிக்கப் படவில்லை. வெளி உலகப் பத்திரிகைகள் இந்தக் கொடூரமான சம்பவங்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளன. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் ஏழு தமிழர்கள் இருப்புப் பாதையோடு கட்டப்பட்டு எரிக்கப்பட்டதுபோன்ற சம்பவங்கள் சிலவற்றை சுற்றுலாப் பயணிகள் வீடியோ படம் பிடித்து வைத்திருக்கிறார்கள்.

(தொடரும்)

## கொள்ளையர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரியாக இருந்து யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள திரு. வி. ஐயாத்துரைக்கும் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

இறுதியில் இராப்போசனமும் அளிக்கப்பட்டது.


யாழ். மக்களுக்கோர்

மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ்

(பிறைவேற்) லிமிட்டெட்

1. கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும், மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நோர்வேயில் (NORWAY) 1984-ம் ஆண்டிற்கான பாடசாலை அனுமதி பெறுவதற்கும் அது தொடர்பான சகல ஏற்பாடுகளுக்கும் உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL
SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

நகல் படிவங்களை;

1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3. சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?

Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-

1. Minolta PPC Photo Copier Model EP 300 78,590-00
2. Minolta PPC Photo Copier Model 300 RE 88,600-00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குறேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்)

படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்:

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக் கூடிய இடம்

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்

(கடைசி வாரம்)
ராணி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
சகலகலா வல்லவன்

லதா (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
கீழ்வானம் சிவக்கும்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
M.G.R. - சரோஜாதேவி
அன்பே வா
கலர் — புதிய கொப்பி
Soon
"IT COULD HAPPEN TO YOU"
A Film on V. D.

100வது நாளைத் தாண்டி
ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

சாந்தி யாழ்நகர்
10.30, 2.30, 4-45, 7-00,
Clint Eastwood in
ANY WHICH WAY YOU CAN
(Color)
Action Thrill

இதுவே கடைசி வாரம்
ராஜா [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
[கலர்]

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30.6-15
வீரப்பா
சரத்பாபு - சுமணலதா
நடித்த
திசைமாறிய பறவைகள்
(புதிய பிரதி)
(சிலதினங்கள் மட்டும்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
விடியும்வரை காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-30
30-10-83 வரை
கமல் ஸ்ரீதேவி குரு
விரைவில்
36th CHAMBER OF SHAOLIN

2வது ஜனத்திரள் வாரம்!
மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5 00, 7-15
"RAID ON ENTEBBE" in
Operation Thunderbolt
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.


## இன்றைய பலன்

ஐப்பசி 10-ம் திகதி
வியாழக்கிழமை
(27-10-83)

மேடம்: பொருள் வரவுடன் உபசாரம் பொழுது போக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும் துள்ளி வரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையைச் சோபிதமடையச் செய்யும்.

இடபம்: நிதியில் முடக்கம் ஏற்படும் சிலர் வீண்பழிக்கும் இலக்காவார்கள் விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவெடுக்கும்பயிர்ச்செய்கையில்பாதிப்பு ஏற்படலாம்.

மிதுனம்: அன்னியசகவாசம் அமைதிக்கு உலைவைக்கும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் அவதானம் வேண்டும் துணிச்சலுடன்எதிர் நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

கடகம்: இல்லத்தில்இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும் இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

சிங்கம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும்அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் கடற்தொழிலாளர்கள் கவனம் செலுத்தவும் சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

கன்னி: மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் மாதுரு வழியால் தனவரவுக்கும் இடமுண்டு வாகன சாரதிகள் அதிக பயனடைவார்கள் டாக்டர்கள் வாழ்க்கைபிரகாசமாக இருக்கும்.

துலாம்: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும் புத்திரர்களால் புகழும் கிடைக்கும் இணைந்திருக்கும் இதயங்கள் இன்பத்தில் மிதக்கும் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவார்கள்

விருச்சிகம்: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும் பகைவர்களின் சூழ்ச்சிபலமாக இருக்கும் காணித் தொல்லையினால் கடன்பட நேரிடும் வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும்.

தனு: கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும் காதல் வசப்பட்டவர்களுக்கு கனிவான தினம் சகோதரம் ஒன்றுக்கு திடீர்த்திருமணமும் நடைபெறும்.

மகரம்: கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள் மற்றவர்களின் ஏழனப் பார்வைக்கு இலக்காகுவீர்கள் பணத்துடன் பழகுபவர்கள் எச்சரிக்கை வேண்டும்.

கும்பம்: கைகொடுத்துஉதவுவதற்கு தந்தை முன் வருவார் காரிய சித்தியும் கிட்டும் தொழில் துறையிலும் இருப்பிடத்திலும் நன்மையான மாற்றம் ஏற்படும்.

மீனம்: பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கும் சிலருக்கு புதிதாக தொழில் கிடைக்கும் வெளியிடத்துத் தொடர்புகள் வளர்வதற்கு வழிவகுப்பீர்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் பார்க்கிறார்கள்! நீங்கள் ஏன் இன்னமும் பார்க்கவில்லை? கடைசி வாரமாகவும் பார்க்காதவர்களுக்கு இது ஒரு கடைசி சந்தர்ப்பமாகவும் காட்சியளிக்கின்றது. இன்றே இப்பொழுதே பார்த்து மகிழுங்கள்.
ரீகல் (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR
Next:
FROM HERE TO ETERNITY


## சாவகச்சேரியில் மரம் நாட்டு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லியோ கழகம் விஜயதசமி தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் பல இடங்களில் மரங்களை நாட்டியது.

இவ்வைபவம் லியோ கழகத்தின் தலைவர் திரு செல்லையா செந்திலாதன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தினை சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயளாளர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தன் சம்பிராயத பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

மரம் நாட்டு விழாவுக்கான மரங்களை இலவசமாக, சிவதர்ம வள்ளல் திரு க. கனகராஜா லியோ கழகத்தினருக்கு அன்பளிப்புச் செய்திருந்தார்.

(க)

## இலவச வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையியல் துறையை மேம்படுத்துவதற்கான இலவச வகுப்புக்களை இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் நடாத்தவுள்ளது.

இவ்வகுப்புக்கள், யாழ்ப்பாணம் பொன்ட் கல்வி நிலையத்தால் நவம்பர் முதல் வாரத்திலிருந்து மாதத்துக்கு நான்கு வகுப்புக்கள் என்ற தொடரில் நடாத்தப்படும்.

பத்திரிகையியல் துறையில் சிறந்த கல்வி மான்கள் வகுப்புக்களை நடாத்துவார்கள்.

## ஒரு வருட நினைவு அஞ்சலி



செல்வன் இளையதம்பி சதானந்தன்

தோற்றம்: 1-9-1967
மறைவு: 22-10-1982

எங்கள் மத்தியிலே பதினைந்து வருட காலம் வாழ்ந்து இன்முகம் காட்டி நன்மொழி பேசி எங்கள் எல்லோரையும் மகிழ்வித்து வந்த எங்கள் அன்புச் செல்வம் மறைந்து இன்று (27 - 10 - 1983) ஒரு வருட நிறைவு (திதி) தினத்தையிட்டு அவரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்,
உறவினர்கள்.

புன்னாலைக்கட்டுவன்
தெற்கு (9537).

## நீதிமன்றில் நவராத்தி விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முதன்முதலாக நவராத்திரிவிழா விமரிசையாகக்கொண்டாடப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு வி. பி. சுந்தரலிங்கம் நீதிமன்றப் பதிவாளர் திரு. சிறிபத்மநாதன், நீதிமன்ற முதலியார் திரு சி. வ. சிவலிங்கம் ஆகியோர் இவ் விழாவில் உரை நிகழ்த்தினர்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (மா)

## அந்தியேட்டி அழைப்பு

இராசையா செல்வராஜு
(மலாயன் எம்பயர் சலூன் உரிமையாளர்)

தோற்றம்: 27-09-54 மறைவு: 28-09-83



பாசமலராய் மலர்ந்து அன்பால் பண்பால் உயர்ந்து அழியா வாழ்விற்கு சென்றுவிட்ட எங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவால் துவண்ட எமது துயரில் பங்கு கொண்டும் ஆறுதல் கூறியும் மேலும் பல வகைகளில் உதவி புரிந்தோர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 28-10-83 வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம்.

பெற்றோர், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.
64/12, ஸ்ரேசன் ரோட், யாழ்ப்பாணம். (9546)

## ஓராண்டு நினைவஞ்சலி

உதயம்: 20 02 1955



நித்திய இளைப்பாறுதல் 27 10 1982

## செ. யோபு கருணாநந்தன் (கண்ணி)

என் ஆருயிர் நேசரே!

நீங்கள் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு ஓராண்டாகுகிறது
நீங்களோ கொடுமை செய்யவில்லை
உங்கள் வாயில் வஞ்சனை பிறந்ததில்லை
கர்த்தரோ தங்களை நொறுக்கச் சித்தங்கொண்டார்
சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலினால்
ஜீவனுள்ளோர் மத்தியிலிருந்து கண்ணிமைப் பொழுதில்
சீயோனுக்குச் சென்றுவிட்டீர்கள்
மீட்கப்பட்டோர் மத்தியிலே சதாகாலங்களிலும்
என்றென்றைக்குமாய் நீங்கள் கிறிஸ்துவோடே
மகிமையில் வீற்றிருப்பதை எங்கள் கண்கள் யாவும் காணும்.

மனைவி-றூபி, மகன் - விஜி,
உற்றார், உறவினர்.

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு, (9508)



கண்கவர் மரத்தளபாடங்கள், பிரம்புத்தளபாடங்கள் ஸ்ரீல் தளபாடங்கள் (ஆர்பிக்கோ) முதலியவற்றிக்கு யாழ் நகரில் பிரபல்யம்மிக்க ஸ்தாபனம்!
* LONG LIFE
* BEAUTIFUL DESIGNS
* VARIETY OF CHOICE
FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS

டில்கா பேணிச்சர் பலஸ்
DILKA FURNITURE PALACE 234,236, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
போன்: 24186
விலை 790/- முதல் 7 000/-வரை

# சீதனப்பிரச்னை: பொருட்களை நொருக்கிவிட்டுத் தற்கொலை!

## பலாலியில் சம்பவம்

(மாவிட்டபுரம்)

மாமனார் தாம் வழங்குவதாக உறுதியளித்த சீதன வீட்டை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் மருமகன் கோபாவேசம் அடைந்தார். ஆத்திரத்தில் வீட்டுப் பொருட்களை அடித்து நொருக்கிய மருமகன் இறுதியில் நஞ்சை அருந்தி தமது உயிரையும் போக்கிக்கொண்டார்:

பலாலி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த கந்தையா தம்பிஐயா (31 வயது) என்னும் 5பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணத்தை தழுவியவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. திருநாவுக்கரசு ஜே. பி. விசாரணை நடத்தினார்.

விசாரணையின்போது அளிக்கப்பட்டசாட்சியங்களிலிருந்து தெரியவந்ததாவது;

காலமானவர் 5 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்திருந்தார். இவரது திருமணத்தின்போது இவருக்கு சீதனமாக வீடு தருவதாக மாமனார் உறுதியளித்தார். ஆனால் அவ்வாறு வீடு வழங்கப்படவில்லை. கடந்த ஒரு வருடமாக இது தொடர்பாக குடும்பத்தில் பிரச்னை இருந்துவந்தது. காலமானவருக்கு வீட்டு உறுதி எழுதித் தருவதாக மாமனார் கூறிவந்த போதும் அதைசெய்யாமையால் காலமானவர் மனமுடைந்திருந்தார். அதுமட்டுமன்றி காலமானவர் வசித்த வீட்டில் காலமானவரின் மனைவியின் சகோதரியும் குடும்பமாக வாழ்ந்து வந்ததும் பிரச்னை ஏற்படக் காரணமாக இருந்தது. சம்பவத்திற்கு சில தினங்களுக்கு முன் காலமானவரின் மைத்துனர் வீட்டுக்கு வந்ததையடுத்தும் வீட்டில் பிரச்னை ஏற்பட்டு காலமானவர் அங்கிருந்த பொருட்களை அடித்து உடைத்தார்.

அதுபற்றி காலஞ்சென்றவரின் மனைவியின் சகோதரி காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்தார். பொலிசார் காலஞ்சென்றவரின் வீட்டுக்கு சென்று அவரை விசாரணைக்கு பொலிஸ்நிலையத்திற்கு வருமாறு கூறிச் சென்றனர்.

இதையடுத்து காலஞ்சென்றவர் கோபாவேசம் அடைந்தார். வீட்டிலிருந்த பொருட்களை அடித்து உடைத்தார். மதுவையும் அளவுக்கு மீறி அருந்தினார். கத்தியொன்றை கையில் எடுத்துக்கொண்டு ''கிட்ட வந்தால் வெட்டுவேன்'' என்று கூறியபடியே நஞ்சை எடுத்து அருந்தி உயிரைப் போக்கினார்.

காலஞ்சென்றவரின் மனைவி அன்னப்பிள்ளை, தந்தை கந்தையா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறுதியில் தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. திருச்செல்வம் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-02 | 'டெலிமச்' ஜேர்மன் விளையாட்டுகள் |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-45 | பொது அறிவுப் போட்டி (ஆங்கிலம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-45 | சிங்களத் திரைப்படம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | திரைப்படத் தொடர்ச்சி |
| 11-30 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## மின்னேரிய எம். பி. ராஜினமா

(கொழும்பு)

மின்னேரிய எம். பி. திரு. மெரில் டி சில்வா தமது பதவியை ராஜினமா செய்துள்ளார்.

முன்னாள் பொலன்னறுவை மாவட்ட அமைச்சரான இவர் உடல்நிலை காரணமாக பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற தலைமைச் செயலாளருக்கு அவர் தமது ராஜினமாவை அனுப்பியுள்ளார்.

## மோட்டார் சைக்கில் கடத்தப்பட்டது

(வவனியா)

வவனியாவில் மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளது.

வீட்டின் முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தசுமார் 17ஆயிரம் ரூபாபெறுமதியான இம்மோட்டார் சைக்கிள் இரவு 8 மணியளவில் கடத்தப்பட்டுள்ளது. வவனியா பொலிசார் புலன் விசாரணை நடத்துகிறார்கள்.

## ரூ. 45,000 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் கிருஷ்ணபிள்ளை கனகசபை என்பவர் வீட்டில் 3 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் 45,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளை நேற்று முன்தினம் இரவு கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

பருத்தித்துறை பொலிசார் இச் சம்பவம்பற்றி விசாரணை செய்து வருகின்றனர். (சு)

## யாழ்ப்பாணத்தில் புதிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன், பிரபாகரன், குட்டிமணி ஆகியோரின் அமைப்புக்களில் உறுப்பினராக இருந்தவர்கள் மீதிப்பேர் என்றும் சிறையிலிருந்து வெளியேறும்வரை முன்னணியின் திட்டப்படி ஒன்றுபட்டு செயல்பட ஒப்புக்கொண்டார்கள் என்றும் சுவரொட்டியில் கூறப்பட்டுள்ளது.

முதலில் திட்டப்படி ஆகஸ்ட் 23-ம் தேதியன்று தப்பித்திருக்க வேண்டும் என்றும் அது தவறிப்போய் விட்டதென்றும் ஆகஸ்ட் 23-ல் நடக்கத்தவறியதை செப்டம்பர் 23-ல் சுலபமாக நடந்த முடிந்ததென்றும் மேலும் இந்த சுவரொட்டிகளில் கூறப்பட்டுள்ளது.

இரவு 8 மணிக்கு பின் அதிகமான ஜெயில் காவலர்கள் இருப்பது வழக்க மென்றும் எனவே ஏழரைக்கே வெளியேற ஆயத்தமானார்கள் என்றும் சிறைக்கட்டட கீழ்ப்பகுதியில் இரவு ஏழரைக்கு தேநீர் வழங்க சிறைக்காவலர்கள் வந்த போது அவர்கள் மீது கைதிகள் பாய்ந்து கட்டிப் போட்டார்கள் என்றும் பின் கைதிகள் தங்கள் கட்டத்தை விட்டு வெளியேறினார்கள் என்றும் சிலர் காவலர்கள் மீது பாய்ந்தார்களென்றும் சிலர் மாடிப்படிக்கு ஓடி அங்கிருந்தோரை விடுவித்தார்கள் என்றும் இதில் கூறப்பட்டிருந்தது.

வெளியே ஓடிவந்ததும் ஈ. த. பு. அ. முன்னணியின் 2 லொறிகளும் ஒரு மினி வானும் தயாராக இருந்தன என்றும், அவற்றில் ஆயுதங்கள், முதலுதவி மருந்துகளும் இருந்தனவென்றும் ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தப்படவில்லையென்றும், கடற்கரைக்கு சென்று 4மோட்டார் படகில் ஏறி இலங்கை கடற்பகுதியை கடந்தார்களென்றும் கொஞ்சநாள் கடலில் பிறகு ஆங்காங்கே தீவுகளில் மீண்டும் படகில் என்பதாக இலங்கை கடற்படைக்கு நழுவி இந்தவாரத்தில் இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டதாகவும் சுவரொட்டியில் கூறப்பட்டுள்ளது.

கோவை மகேசன், தர்மலிங்கம் இருவரும் பலத்த அடிகளால் உடல்நலம் குன்றியிருந்தார்களென்றும் அவர்களுடன் தானும் தங்கவிரும்புவதாக பாதிரியார் சிங்கராயர் கூறிவிட்டாரென்றும் நிர்மலா நித்தியானந்தன் பெண்கள் பகுதியில் இருந்ததால் அப்பகுதியை இருட்டில் சரியாக சாவி பூட்டில் நுழையமுடியாததினால், திறக்க முடியவில்லையென்றும் அவர்கள் அனைவரும் தனிப்பட்ட கொள்கை ரீதியான காரணங்களுக்காக வெளியேவரவிரும்பாமல் இருந்திருக்கலாம் என்றும். அச்சுவரொட்டியில் மேலும் கூறப்பட்டிருந்தது.

''நிச்சயமாக எங்கள் போராட்டம் தொடரும் இங்கே இருந்துகொண்டு அங்கே போராட்டம் நடத்த முடியாது'' என்றும் சுவரொட்டியில் கூறப்பட்டிருந்தது.

## ப. நோ.கூ.ச.இயக்குநராக பெண்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் முதல் தடவையாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர் சபை உறுப்பினர்களாக பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மன்னார், நானாட்டன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே இவ்வாறு பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செல்வி பாக்கியம் சின்னத்தம்பி, திருமதி சந்தானம் ஆகியோரே தெரிவு செய்யப்பட்ட பெண்களாவர். (சு)

## 5-ம்,6-ம் கட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'அரச, கூட்டுத்தாபன வர்த்தக துறையைச் சேராத சுய தொழில் பார்த்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

''யாழ்ப்பாண பிரிவில் 5-ம், 6-ம் கட்ட உணவுப் பொருட்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?''

''14வயதுக்குமேற்பட்ட 784 பேருக்கும்,14வயதிற்குட்பட்ட 261பேருக்கும் வழங்கப்பட்டது.''

''5ம்,6ம் கட்ட விநியோகம் எப்போதைக்குரியது?''

''5-ம் கட்டம் அக்டோபர் 1-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை 6-ம் கட்டம் அக்டோபர் 16-ம் தேதி முதல் அக். 30-ம் தேதிவரை''

''உணவு பொருட்கள் எவ்வளவுவீதம்வழங்கப்பட்டது?'

''ஒருவருக்கு 3கிலோ அரிசி, 3 கிலோ மா, அரைக்கிலோ சீனி, ஒரு லக்ஸ்பிறே பக்கட் வழங்கப்பட்டது. 14 வயதிற்குட்பட்டவருக்கு இதில் அரைவாசி வழங்கப்பட்டது''

இவ்வாறு எனது கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

## பேச்சுவார்த்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்ட குடியேற்றங்கள் நடைபெற்றுவருகிறது. ஆனாலும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை வடக்கு கிழக்கு மாகாணத்தில் குடியேற்ற சகல நடவடிக்கைகளையும் எனது கட்சி மேற்கொள்ளும்'' என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் முன்னாள் இலங்கை எம். பி.க்கள் திரு. த. சிவசிதம்பரம், திரு. ஆனந்தசங்கரி ஆகியோரும் பேசினர். (சூ)


## மரண அறிவித்தல்

### கு. இராஜநாதன்

(Retired Internal audit cheif clerk, Jaffna Municipality)

காலம்சென்ற முதலியார் குழந்தைவேலுவின் மகனும், காலம்சென்ற இளைப்பாறிய மலாயன் பென்சனர் சுந்தரம்பிள்ளையின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவனும், ஜெயகுமார், தக்ஷினி, சதீஸ்குமார், ரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆகிய இராஜநாதன் காலமானார். அன்னாரின் பூதவுடல் 27, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணையிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து இன்று முற்பகல் 11 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(9556)



## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா வைரமுத்து

ஏழாலை வடக்கு ஊரங்குனையைச் சேர்ந்த திருமதி சின்னம்மா வைரமுத்து 26-10-1983ல் சிவபதம் எய்தினார். இவர் காலம்சென்ற பிரபல வர்த்தகர் வைரமுத்துவின் அன்பு மனைவியும், செல்வரத்தினம்(உரிமையாளர், செல்வரத்தினம் ஸ்டோர்ஸ், கொழும்பு), ஸ்ரீசெல்லம் (அரிசி ஆலை, ஏழாலை), இந்திராணி(அரிசி ஆலை, மாங்குளம்), பிரபல வர்த்தகர் கனகரத்தினம் (S. R. S., கொழும்பு—ஏழாலை), நவரத்தினம் (பொறியியலாளர்), செல்வராணி, பரமேஸ்வரி, சந்திராதேவி, இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், புவிராஜசிங்கம் (C. T. B. வெரகர), விஜயரத்தினம் (அதிகாரி, இலங்கை வங்கி, அம்பாறை), சிவராசா (கமநல சேவைநிலையம், நல்லூர்), கிட்டினபிள்ளை (பொறியியலாளர், இலண்டன்), நந்தினி, கமலஜோதி, கௌரி ஆகியோரின் அன்பு மாமியும், காலம்சென்ற ஆறுப்பிள்ளை, கந்தையா, சின்னத்தங்கம், காலம்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனிமொழி, தாரிணி, தர்சணி, வைகுந்தன், செந்தூரன், கோகுலன், விஜயந்தி, ஜெயஹரி, ரவிமோகன், பார்மிளா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல்(இன்று)27-10-1983வியாழக்கிழமை காலை 10மணிக்கு தகனக் கிரிகைகளுக்காக குரும்பசிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீசெல்லம் அரிசி ஆலை, ஏழாலை வடக்கு.

(9553)



## மரண அறிவித்தல்

### திருமதி. விசாலாட்சி முருகேசு

(இளைப்பாறிய ஆசிரியை)

கல்வயலூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி விசாலாட்சி முருகேசு அவர்கள் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் ஆறுமுகம் முருகேசு அவர்களது அன்பு மனைவியும், திருமதி நீலாம்பிகை கணபதிப்பிள்ளையின் அன்புத் தாயாரும், திரு. ச. கணபதிப்பிள்ளை (பிரதிப் பணிப்பாளர், திறைசேரி) அவர்களின் மாமியாரும், பாலகுமாரன் (கணக்காளர், கனடா), திருமதி பகீரதி ஸ்ரீஸ்கந்தகுமார் (சட்டத்தரணி, தேசிய வீடமைப்பு அதிகார சபை, கொழும்பு), சிவசக்தி, திருக்குமாரன், K. V. S. ஸ்ரீஸ்கந்தகுமார் (அரச சட்டத்தரணி) ஆகியோரது அன்புப் பேத்தியாருமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-10-83) வியாழக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்வயல் இல்லத்திலிருந்து சாவகச்சேரி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

கணபதிப்பிள்ளையும் குடும்பத்தினரும்

9557


இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி [illegible] இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu-P. O. Box, 49. Telegram, Eelanadu, Telephone, 22389—24126.